நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 03 மலர் 32 ஏப்ரல் 2023 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com

Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app

“அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை, தமிழீழ தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது”

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்







# தமிழின பிரமுகர்களுக்கு ஒரு பகிரங்கமான சவால்

-தாயகன்-

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப்பகுதியில் ஒரு நகபூசனி சிலை. அதனை அங்கு வைத்தது யார் என்று பொலிஸார் துருவுகின்றனர். ஒட்டுமொத்த இந்து அமைப்புக்களும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் பெட்டிப்பாம்பாய் அடங்கிவிடுகின்றனர்.

எந்தவொரு, இந்து மதப் பற்றாளனுக்கோ, அல்லது எனது தாய் மண் என்று மார்பு தட்டுகின்ற தமிழ்த் தேசியப் பற்றாளனுக்கோ நான் தான் இந்த சிலையை வைத்தேன் என்று உரித்துக் கொண்டாட இயலுமை இருந்திருக்கவில்லை.

இந்த இயாமையைப் பார்க்கின்றபோது, தான் அன்றாடம் வழிபடுகின்ற தெய்வச் சிலையை வைத்தேன் என்று கூறவோ, தான் அன்றாடம் நடமாடுகின்ற தனது சொந்தப் பிரதேசம் என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்ற தாயகத்தில் சிலை வைத்தால் உனக்கு என்ன என்று பதில் கேள்வி எழுப்ப முடியாது ஒழிகின்ற தரப்பு எப்படியப்பா, பௌத்த சிலைகள் அடுக்கடுக்காக முளைக்கின்றபோது, துணிந்து நின்று எதிர்த்துப் போராடும். அச்சிலைகளை அகற்றுவதற்காய் பாடுபடும் என்ற பல கேள்விகள் நீட்சியாய் தொடுகின்றது.

சிலைக்கு சொந்தக்காரர்களை விசாரித்துக்கொண்டிருந்த பொலிஸார் நேரடியாக சென்று அதனை அப்புறப்படுத்தியிருந்தால் நிலை எப்படியிருந்திருக்கும். சிலை அப்புறப்படுத்தியதன் பின்னர் ஓரிரு நாட்களுக்கு ஊடகவியலாளர் சந்திப்பும், ஊடக அறிக்கைகளும் நிரம்பி வழிந்திருக்கும். முகநூலில் போராட்டம் நடந்திருக்கும் அவ்வளவு தான்.

நல்லவேளை பொலிஸார் நீதிமன்றத்துக்குச் சென்றனர். இதனால், தற்போது அந்தச் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலிஸாருக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அந்தச் சிலை தொடர்ந்தும் அங்கு இருப்பதற்கு எழுத்து மூலமான சமர்ப்பணங்களை மேற்கொள்றுமாறு நீதிபதியால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்போது, எழுத்துமூலச் சமர்ப்பணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கும் போதாவது, யாராவது நாமே சிலையின் உரித்தாளிகள் என்று முன்வருவார்களா இல்லை, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சிரேஷ்ட சட்டத்தரணியான என்.சிறிகாந்தாவும், துடிப்புமிகு சட்டத்தரணியான எம்.திருக்குமரனும் தான் சிலைக்கான உரித்தாளர்களாக மாறும் நிலைமை உருவெடுக்கப்போகின்றதோ தெரியவில்லை.

இந்து சமயப் பற்றாளர்களும் சரி, பெரியோர்களும் சரி, காவிகளை உடுத்துவம், பட்டை தீட்டிக் கொண்டு உருத்திராக்கம் கொட்டைகளை அணிந்துகொண்டும், நிற்பது மட்டும் பொருட்டல்ல. அதேபோன்று, தமிழ்த் தேசியப் பற்றாளர்களாக தம்மை உருவகித்து, தாயக மண்ணில் அடக்குமுறை, ஆக்கிரமிப்பு என்று ஆயிரமாயிரம் தடவைகள் உச்சரித்துக்கொண்டு நிற்பது விடயமல்ல. அதற்கு அப்பால் செயற்பாட்டில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளன.

குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைக்கப்படும்போதும், ஆதிலிங்கம் அகற்றப்படும்போதும் போராட்டங்களும், கோசங்களும் மேற்படி சக்திகளால் இயலுமானவரையில் நிகழ்ந்தன. நீதிமன்றத்தினைக் கூட நாடி முடிந்தது. ஆனால் அவற்றின் விளைவுகள் என்ன? வெறும் புத்தர் சிலை தற்போது விகாரையாக வளர்ந்து நிற்கின்றது. இது ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் மிக அண்மித்த உதாரணமாகும்.

சிங்கள தேசிய வாதம், தாயகத்தை நோக்கிய திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பை கல்லோயாத் திட்டத்துடன் ஆரம்பித்து விட்டது என்பது வரலாறு. ஆனால், அதன்பின்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது, அபகரிப்பு நடைபெறுகின்றது என்று கோசங்கள் எழுந்திருக்கின்றனவே தவிர எவையும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கவில்லை. அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் மீட்கப்படவில்லை.

ஆக, புத்தூர் நிலாவரையில் மட்டும் திடீரென தோன்றிய புத்தர்சிலை, தியாகராஜா நிரோஷ் என்ற தனிமனிதனின் மனவலிமையுடனான போராட்டத்தால் தான் அகற்றப்பட்டதே தவிர, அதனைவிடவும் வேறெங்கும் ஒரு சிலையல்ல சிறு கல்லைக் கூட அகற்றியதாக பதிவுகள் இல்லை. இது தான் யதார்த்தமான நிலைமையாகின்றது.

உதாரணமாக வெடுக்குநாறியை எடுத்துக்கொண்டால் அங்கு நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது தான் ஆதிலிங்கேஸ்வரர் அடித்து நொருக்கப்பட்டார். ஆனால் அதனை பிரதிஸ்டை செய்ய முனைந்தபோது, நீதிமன்றில் வழக்கு இருப்பதாக தடுத்து நிறுத்தப்படுகின்றது. சிறிலங்காவின் நீதித்துறை ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு உட்பட்டது என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு பௌத்த மதத்துக்கு தான் முதன்மைத் தானம் வழங்கியுள்ளது. அதனை காப்பது தான் நீதித்துறையின் முதற்கடமையாகின்றது. ஆகவே நீதித்துறையை நம்பினால், தாயகத்தில் பௌத்த விகாரைகளும், புத்தர் சிலைகளும் மேலும் விரிவாக்கம் அடைவதை நிறுத்த முடியாது.

அதேபோன்று, இந்தியாவிடம் முறையிடுவதால் பௌத்த ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திவிடவும் முடியாது. ஏனென்றால் இந்தியா பௌத்தத்தினை எதிர்க்கவில்லை. தற்போது மத்தியில் ஆட்சி செய்கின்ற சனாதன தர்மத்தை ஏற்றுக்கொள்கின்ற பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கமானது இந்துத்துவாவுடன் பௌத்தத்தையும் ஒரு தட்டில் வைத்து தான் பார்கின்றது.

இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களுடன் அதற்கு காணப்படும் இரண்டாந்தார மனநிலைகூட பௌத்த சமயத்துடன் இல்லை. அவ்வாறிருக்கையில், பௌத்த ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்ப்பது மகா முட்டாள்தனம்.

அவ்வாறானால் என்ன செய்வது, முதலில், இடைக்காலத்திலிருந்தோ, ஆரம்பகாலத்திலிருந்தோ காவியுடை தரித்தவர்களும் சரி, அந்தணர்களும் சரி, ஏனைய சிவில், அரசியல் தரப்பினரும் சரி, சகோதர இன, மத தரப்பினரும் சரி ஓரணியில் திரள வேண்டும்.

ஒன்று திரள்கின்ற தரப்புக்கள் தமக்குள் உள்ள ஐயப்பாடுகளையும், அரசியல் மற்றும் இதர சுயலாப நோக்கத்தையும் களைந்து இதய சுத்தியுடன் பொதுவானதொரு மூலோபாயத்தினை வரைய வேண்டும். அவ்வாறு வரையப்படுகின்ற மூலோபாயம் இரண்டு வகைப்பட வேண்டும்.

முதலாவது, வரலாற்று ரீதியாக இருக்கின்ற தமிழர் தொன்மங்களை பாதுகாப்பதாகவும், அதேநேரம், புத்தர்சிலைகள் அல்லது பௌத்த தொன்மங்கள் மூலம் இலகுவில் ஆக்கிரமிக்கப்படக் கூடிய இடங்களை அடையாளம் கண்டு மாற்று நடவடிக்கை எடுப்பதாகவும் அமைய வேண்டும்.

இரண்டாவதாக, தற்போது சிறிய அளவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து அவற்றை அகற்றுவதற்கான உபாயங்களை தயாரிப்பதோடு, சிறிலங்கா மத்திய அரசாங்கத்தின் நகர்வுகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அதன்படி வியூகங்களை வகுப்பதாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு இரு மூலோபாயங்களை வகுத்து செயற்படாத பட்சத்தில், இந்த ஆக்கிரமிப்புக்களை ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாத நிலைமையே ஏற்படும். அதேநேரம், ஏனைய மதத்தவர்களும் ஆக்கிரப்பின் வீச்சை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பௌத்த ஆக்கிரமிப்பு வெறுமனே இந்து மையங்களை இலக்கு வைத்து நடத்தப்படவில்லை. அந்தோனியார் ஆட்சி செய்யும் கச்சதீவிலும் நடைபெறுகின்றது. அரிசி மலையிலும் நீளுகின்றது. ஆகவே, இந்துத்துவாவை மையப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற மத முரண்பாடுகளுக்குள் சிக்காது, ஒன்றுபட்டதொரு செயற்றிட்டத்தினை மத அமைப்புக்கள் முன்னெடுப்பது பிறிதொரு நகர்வாக இருக்க முடியும்.

இதனைவிடுத்து ஒருநாள் அடையாள உண்ணா விரதமிருப்பதும், அவ்வப்போது அரசியல் பிரமுகர்கள் வந்து செல்வதும், எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மேற்படி நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு அவற்றுக்கு கூட்டாண்மையுடனான செயல்வடிவம் கொடுக்கப்படும் வரையில் சிங்களத்தின் பௌத்தத்தினை மையப்படுத்திய ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவே முடியாது.

அவ்வாறில்லை, நாம் தனிப்பெரும் சக்திகள். வல்லவர்கள், நல்லவர்கள் நாலும் தெரிந்தவர்கள் என்று மார்பு தட்டுபவர்களுக்கு இந்தப் பத்தியின் ஊடாக ஒரு சவால் விடுக்கப்படுகின்றது.


சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள பகுதியில் அதாவது, குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வீரவேங்கைகளின் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்த மேடைக்கு அண்மித்ததாக அரச மரம் வளர்க்கப்பட்டு வெறும் மூன்றரை அடியில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை முடிந்தால் அகற்றிக் காட்டுங்கள் பார்க்கலாம்.

அதேநேரம், அதிகாரப்பகிர்வு கோரும், தமிழர்களின் கையில் தான் சாவகச்சேரி நகரசபை ஆட்சி இருந்தது. இவர்களின் ஆட்சி எல்லைக்குள் தான் குறித்த புத்தர் சிலையும் உள்ளது. ஆனால் ஆட்சி செய்தவர்கள் அந்த சிலை வைக்கும் போதும் எதிர்க்கவில்லை. வைத்து முடிந்த பின்னரும் எதிர்க்கவில்லை. இப்போதும் எதிர்பார்களோ தெரியாது. இல்லை அதிகாரம் இல்லையென்று கைவிருத்து விடுவார்களோ புரியவில்லை.

இந்த நிலையில் இருக்கும் தமிழனம் தான் தனது விடுதலைக்காக, ஒரு கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு எதிராக போராடிக்கொண்டிருக்கின்றது என்று எண்ணும் போது வெறுப்பு ஏற்படுவது மட்டுமல்ல வேடிக்கையாகவும் உள்ளது.



# இலங்கையில் இனவழிப்பு தொடர துணைபோகிறது ஐ.எம்.எப்.?



தீபச்செல்வன்

இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. அதன் பாதிப்புக்களில் இருந்து இன்னமும் மீள முடியாத நிலை தொடர்கின்றது. எப்போதும் எரிபொருட்களை பெறுவதில் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கிறது. இன்னமும் சந்தையில் பால்மா தட்டுப்பாடு நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில் அண்மையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்கியுள்ளது. மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையிலும் தமிழினம் மீதான ஒடுக்குமுறைகளை ஸ்ரீலங்கா அரசு நிறுத்தவில்லை. பொருளாதார நெருக்கடியின் உச்சத்திற்கு இன ஒடுக்கு முறைகளும் உயர்ந்தே உள்ளன. இந்த நிலையில் ஐஆகு வழங்கிய கடனும் இனவழிப்புக்கே உபயோகமாகப் போகிறதா?

முன்னாள் அதிபர் கோத்தபாய ராஜபக்ச, தமிழின அழிப்பை வீரப் போராக சித்திரித்து, அதன் வழி ஆட்சியைக் கைப்பற்றினார். ஆட்சியில் இருந்தபோது ஈழத் தமிழ் மக்களுக்கு மிக மிரட்டலான கருத்துக்களை வெளியிட்டதுடன், போரில் தப்பிய மக்களை வேறு வகையில் ஒடுக்கி அழிக்கும் செயல்களில் மாத்திரம் கவனம் செலுத்தினார். இராணுவத்திற்கு முன்னுரிமை, இராணுவப் பாணியில் ஆட்சி, இராணுவத்தை பொதுநிர்வாகத்தில் முன்னிலைப்படுத்தியமை போன்ற காரணங்களால் ஸ்ரீலங்கா அரசு பாரிய வீழ்ச்சியை சம்பாதித்தக் துவங்கியது. மக்கள் உணவின்றி, குடிநீரின்றி பெரும் தவிப்புக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

குழந்தைகள் பால்மா இன்றி பசியில் துடிதுடித்தனர். பஞ்சமும் கொடுமையும் மிக்க கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியில் சர்வாதிகாரமும் இராணுவப் போக்கும் மாத்திரம் குறையாமல் மிகுந்தது. அத்துடன் தமிழர்களுக்கு எதிராக ஜனநாயக மற்றும் மனித உரிமை விரோதப் போக்கும் குறையாமல் இருந்தது. இந்த நிலையில் எந்த மக்களால் தூக்கி அறியணையில் கோத்தபாய ராஜபக்ச ஏற்றி அமர்த்தப்பட்டாரோ அந்த மக்களே அவரை தூக்கி வீசினர். இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக கோத்தபாய நியமித்து பின்னர், அவர் பாராளுமன்ற வாக்கெடுப்பின் வழி ஜனாதிபதியாக தன்னை பலப்படுத்திக் கொண்டார்.

இலங்கையின் பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக கடன் சுமை காணப்பட்டது. இலங்கைக்கு கடந்த ஆண்டின் இறுதிவரையில் சுமார் 51 பில்லியன்கன் கடன் இருந்தது. அவசியமாக திருப்பிச் செலுத்த வேண்டியதாக மாத்திரம் 35 பில்லியன் டாலர்கள் இருந்த சமயத்தில் கடன் தொகையை செலுத்துவதை இலங்கை தள்ளி வைத்துக் கொண்டிருந்தது. கடந்த ஆண்டில் மாத்திரம் ஏழு பில்லியன் டாலர்களை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டது. இந்த கடன் சுமையால் நாடு இருண்ட யுகத்தில் சிக்கித் தவித்தது. தொடர்ச்சியான மின் தடை, எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய உணவுத் தட்டுப்பாடு, மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு என்பவற்றுடன் அனைத்திற்குமன வரிசை யுகம் ஒன்றை இலங்கை தீவு மக்கள் சந்தித்தனர்.

இலங்கை இந்தக் கடன் சுமையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை எதிர்பார்த்தது. ஆனால் சர்வதேச நாடுகள் ஸ்ரீலஙகா அரசு மீது வைத்த நேரடி நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் மறைமுகமாக முன்னிறுத்தின. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டு என்பதையும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதையும் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. அத்துடன் முள்ளிவாய்க்கால் போரில் நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை கடந்த பல ஆண்டுகளாக இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றது.

பல கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், பல்வேறு நிபந்தனைகளுக்குப் பின்னர், தற்போது சர்வதேச நாணய நிதியம் ஸ்ரீலங்காவுக்கு 333 மில்லியன் டாலர்களை கடனாக வழங்கியுள்ளது. அதாவது 3 பில்லியன் தொகையாகும். நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின்கீழ் எதிர்வரும் 48 மாதங்களில் இலங்கைக்கு 2.286 பில்லியன் டொலர் நிதியை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது. இதே வேளைஇலங்கையின்கடன்பிரச்சினை சுமார் 50இற்கும் அதிகமான பில்லியன்களாக காணப்படுகின்றது. இதில் தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து வழங்கி வருகின்றது. கோத்தபாய காலத்திலும், பொருளாதார நெருக்கடி காலத்திலும், ரணில் ஆட்சியிலும் தொடர்ந்த தமிழர் தாயகம் மீதான தொல்லியல் ஆக்கிரமிப்பு சற்று வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைத்து வீசப்பட்டுள்ளன. அம்மன் சிலையின் கழுத்து அறுக்கப்பட்டுள்ளது. குறித்த ஆலயத்தை எப்படியாவது ஆக்கிரமிக்க வேண்டும் என்றும் அங்கு பௌத்த சிங்கள விகாரையை கட்டி விட வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா அரசும் சிங்களக் பேரினவாதிகளும் கங்கணம் கட்டி செயற்பட்டுக்கொண்டுள்ளனர். குறிப்பாக ஸ்ரீலங்கா அரசின் தொல்லியல் திணைக்களம், இதில் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த நாசகார வேலையை தொல்லியல் திணைக்களமும் சிங்களப் பேரினவவாதிகளுமே செய்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

வெடுக்குநாறி மலையிலும், குருந்தூர் மலையிலும், கன்னியா வெந்நீரூற்றிலும் நெடுந்தீவு வெடியரசன் கோட்டையிலும் இன்னமும் பல நூறு இடங்களில் தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிப்புக்களை மேற்கொள்ள திட்டம் கொண்டிருக்கிறது. முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நீதிமன்றம் விகாரை அமைக்க தடை விதித்த நிலையில், ஸ்ரீலங்கா அரசின் காவல்துறை மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. பாரிய பொருளாதார பிரச்சினையால் நாட்டில் ஒரு அங்குல வீதிகூட புனரமைக்கப்படுவதில்லை. ஆனால் தமிழர் தாயகத்தில் மாத்திரம் பாரிய விகாரைகள் அமைக்க எங்கிருந்து நிதி வருகின்றது? குருந்தூர் மலை பாரிய விகாரை இதற்கு தக்க சாட்சி.

ஸ்ரீலங்கா அரசுக்கு நிபந்தனையின்றி வழங்கும் உதவிகள் தமிழினத்தை இனப்படுகொலை செய்யவே வழிவகுக்கும் என்பதை கடந்த காலத்தில் பலதடைவைகள் சுட்டிக்காட்டி வருகிறோம். இதுவே ஐஎம்எப் கடன் விடயத்திலும் நடக்கின்றது. இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்தில் சுமார் ஐம்பது வீதமான அளவு நிதி இராணுவம் மற்றும் காவல்துறைக்கு ஒதுக்கப்படுகின்றது. காவல்துறையும் இராணுவமும் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புக்களையும் அழிப்புக்களையும் ஒடுக்குமுறைகளையும் முன்னெடுத்து வருகின்றது. இதற்கான நிதி ஐஎம்எப் வழங்கிய கடனில் இருந்துதான் செலவிப்படப்படுகிறதா?

இலங்கை அரசுக்கு பொருளாதார ரீதியாக தன்னை அபிவிருத்தி செய்வதைக் காட்டிலும் தமிழ் இனத்தை அழித்துவிட வேண்டும் என்பதில்தான் அதிகம் அக்கறை. பொருளாதார நெருக்கடியின் போது உறங்கு நிலையில் இருந்த சிங்களப் பேரினவாதம் இப்போது மீண்டும் உருக்கொண்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் நிபந்தனைகள் வழியாகவும் சர்வதேச பொறிமுறையின் வழியாகவுமே இலங்கையில்தொடரும்ஆக்கிரமிப்பையும்ஒடுக்குமுறையையும் முடிவுக்கு கொண்டுவரலாம். தவறும்பட்சத்தில் சர்வதேச உதவிகளும் ஈழத் தமிழர்களை அழித்து முடிக்க உதவும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 03 மலர் 34 ஏப்ரல் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# தமிழர் தரப்பு எந்தப் பக்கம்?

சிறிலங்காவின் மாகாண சபைகளுக்கான தேர்தல் முடக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகின்ற நிலையில் தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்லும் திகதி குறிப்பிடப்படாது இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

ஆக, கிட்டிய காலத்தில் குட்டித்தேர்தல்களுக்கு இடமில்லை என்பது உறுதியாகிவிட்ட நிலையில் அடுத்து பாராளுமன்றத் தேர்தலா இல்லை ஜனாதிபதி தேர்தலா என்பது தான் தற்போதைய வாதமாகவுள்ளது.

எவ்வாறாயினும், மக்கள் ஆணை பெறாத ஜனாதிபதி என்ற இழிச் சொல்லுக்கு இலக்காகி வரும் அரசியல் நரித்தந்திரங்கள் நிறைந்த தற்போதைய ரணில் விக்கிரமசிங்க, அடுத்து ஜனாதிபதி தேர்தலொன்றை நடத்தவதை நோக்கியே காய்களை நகர்த்தி வருகின்றார் என்பது தான் தென்னிலங்கையின் தகவல்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவும் கூட்டிணைந்து அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குமா! இல்லை, ராஜபக்ஷக்களின் பிடியிலிருந்து இறுதி நேரத்தில் வெளியேறி புதிய வியூகத்துடன் பொதுவேட்பாளராக களமிறங்குவரா என்பது இறுதி வரையில் நீடிக்கப் போகும் கேள்வியாகவுள்ளது.

எவ்வாறாயினும், ரணில் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கப்போவது உறுதியானது. அவ்விதமாக அவர் களமிறங்கும் பட்சத்தில் சஜித் பிரேமதாசவும், அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது போட்டாளர்களாக இருக்கப்போகின்றனர்.

சிலவேளை, பஷில் ராஜபக்ஷ அல்லது, கோட்டாவின் வழிநடத்தலில் அததெரன தொலைக்காட்சியின் பணிப்பாள திலித் ஜயவீர ஆகிய இருவரில் ஒருவர் அல்லது இருவருமே களத்தில் குதித்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இவ்வாறு, தென்னிலங்கை தேசிய கட்சிகளிலிருந்து குறைந்தது ஐந்து அல்லது ஆறு வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தல் களத்தில் நிற்கப்போகின்றனர் என்பது உறுதியானது. அந்தநபர்கள் தென்னிலங்கை பௌத்த, சிங்கள வாக்குகளை மையப்படுத்தியே அதிகமாக செயற்படப்போகின்றனர்.

இருப்பினும், அந்தத் தரப்பினருக்கு தமிழ் பேசும் வாக்காளர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாக உள்ளது. அதனடிப்படையில் பார்க்கையில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தற்போது சஜித் அணியில் உள்ளன.

ஆனால் அவை முழு மனதுடன் அந்த அணியில் உள்ளன என்று கூறுவதற்கு இல்லை. ஆகவே இறுதி தருணத்தில் வெற்றிக்காற்று அடிக்கும் தரப்பை அவர்கள் ஆரத்தழுவுதற்கே வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

மறுபக்கத்தில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஈழமக்கள் ஜனநாயக கட்சி உள்ளிட்ட சில தமிழ்த் தரப்புக்கள் ரணிலுடன் கைகோர்த்தாகிவிட்டது.

இந்த நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் தேசியத்தில் இருக்கின்ற கட்சிகள் யார் பக்கம் நிற்கப்போகின்றன என்பது தான் பெருங்கேள்வியாகியுள்ளது.

இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையின் எந்தவொரு வேட்பாளர்களையும் அத்தரப்பு ஆதரிக்கும் முடிவினை எடுக்கப்போவதில்லை.

ஏனெனில் ஒற்றையாட்சியை அந்த தரப்புக்கள் அனைத்தும் முன்னிலைப்படுத்துவதால் அத்தலைமைகளுடன் பேரம்பேசுவதில் பயனில்லை என்பது அத்தரப்பின் வாதம்.

இந்த நிலையில், தனித்துச் செயற்பட ஆரம்பித்திருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அறிவித்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன எவ்விதமான தீர்மானங்களை எடுக்கும் என்பது பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தரப்புக்கள் அனைத்துமே, ரணில், சஜித் உள்ளிட்டவர்களுடன் பேரம்பேசி இணக்கப்பாட்டுக்குச் சென்று ஏற்கனவே விரலைச் சுட்டுக் கொண்ட அனுபவத்தினை நிறையவே கொண்டிருக்கின்றன.

அதேநேரம், இந்தத் தரப்புக்களுடன் பேரம்பேசிவிட்டு தென்னிலங்கை வாக்குகளை கணிசமாக வாரிச்சுருட்ட முடியாது என்ற சூட்சுமத்தை ரணிலும் சஜித்தும் நன்றே அறிந்து வைத்துள்ளனர். ஆகவே, ரணிலும், சஜித்தும் நிபந்தனைகளை ஏற்று வெளிப்படையாக ஆதரவினை பெறுவதற்கு முன்வரப்போவதில்லை.

குறித்த தமிழ்த் தரப்பும் தமிழ் மக்களுக்காக உண்மையாக செயற்படுமாயின், கண்ணை மூடிக்கொண்டு நிபந்தனையின்றி ஆதரவளிக்கப்போவதுமில்லை. ரணில், சஜித்தை விட்டால் தமிழ்த் தேசியத் தரப்புக்களுக்கு வேறு தெரிவும் கிடைக்கப்போவதில்லை.

அநுர உட்பட வேறெந்த புதிய அறிமுக வேட்பாளர்களும் சிங்கள, பௌத்த தேசிய வாதத்தினை துறந்து தமிழர்களின் ஆதரவினை கோரி முற்போக்காகச் செயற்படப்போதுமில்லை.

ஆகவே, ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாக, இந்த விடயத்தில் தமிழ் தேசிய சக்திகள் தீர்க்கமான முடிவென்றை அறிவிக்க வேண்டும். தெரியாத தேவதையை விட, தெரிந்த பிசாசே மேல் என்ற நிலையில் முடிவெடுத்தால் கூட, அது தமிழர்களின் எதிர்காலத்தினை மையப்படுத்திய மூலோபாயத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதற்காக, அரசியல் பேதங்களுக்கு அப்பால் இனம்சார்ந்த சிந்தனையும், திறந்தமனத்துடனான வெளிப்படையான கலந்துரையாடலும் தான் அவசியமாகின்றது.

# ஈடுசெய்ய முடியாத இழப்பு



சிறிலங்காவின் தனித்துவமான சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்களில் மிக முக்கியமானவர். ரொய்ட்டர், பி.பி.சி வீரகேசரி என்று பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களில் பணியாற்றியவர். பன்முகத் ஆளுமை மிக்கவர்.

அவர் வேறு யாருமல்ல, பொன்னையா மாணிக்கவாசகம். அவர் நிரந்தரமாக அனைவரையும் விட்டுப் பிரிந்து விட்டார். தனது 76ஆவது வயதில் அவர் இந்த உலகிற்கு விடைகொடுத்து விட்டார்.

அவர், ஓய்வுபெற்ற வவுனியா தெற்கு பிரதி கல்விப்பணிப்பாளர் நாகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், வைத்தியகலாநிதி பவித்திராவின் பாசமிகு தந்தையும், வைத்தியகலாநிதி தினேஸின் அன்பு மாமனாரும், தனேந்திராவின் பேரனுமாவார்.

அவரது பிரிவு, தமிழ் ஊடகப் பரப்பில் பாரிய வெற்றிடத்தினை ஏற்படுத்திவிட்டது. அவரது வெற்றிடம் நிரந்தரமானது. நிரப்ப முடியாதது.

போர்க் காலங்களில் லண்டன் பிபிசிக்காக செய்திகளை வழங்கி வந்த அவர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவருடைய ஆளுமையை புடம்போட்டுக் காட்டியது.

அவர் அதற்கு முன்னதாகவே, வீரகேசரியில் தனது ஊடகப்பணியை ஆரம்பித்திருந்தார். தொன்மை மிகு வீரகேசரியில் அவரின் பங்களிப்பு இன்றியமையாயது. செய்திகள், கட்டுரைகள், பத்திகள், நேர்காணல்கள் என்று அவரின் படைப்புக்கள் ஆழமானவை. வாசகர்களை கவர்ந்திழுப்பவை.

அதுமட்டுமன்றி, எந்தச் செய்திகளையும் அறிக்கையிடும்போது நடுநிலை தன்மையோடு, உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்தி ஒரு ஊடகவியலாளர் இவ்வாறு தான் செயற்பட வேண்டும் என்று முன்மாதிரியாக திகழ்ந்த உண்மையான ஊடகவியலாளர்.


கைது, சிறைவாழ்க்கை, உயிர் அச்சுறுத்தல்கள் என்று நெருக்கடியான நிலைமைகள் நீடித்தாலும் அத்தனைக்கும் அஞ்சாத உளத்துடன் பலமாக நின்றுழைத்த துணிச்சலான பேனாப்போராளியாவார்.

ஊடகத்துறையுடன், நின்றுவிடாது, சமூகச் சிந்தனைகளையும் நன்றே கொண்டிருந்தார். நூல்களை வெளியிட்டார். அடுத்த பரம்பரைக்கு முன்னோடியாக விளங்கினார்.

இளையவர்களை அரவணைத்தார். அவரின் சாதனைகள் பல. அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் பல விருதுகளுக்கும் அவர் சொந்தக்காரர். அவது செயல்கள் என்றும் நீடித்து நிலைத்திருக்கும்.

எந்தத் தலைமுறை வந்தாலும் மாணிக்க வாசகம் அவர்கள் முன்னோடி தான். அவரைப் பின்பற்றி முன்னேறுவதற்கு ஆயிரம் விடயங்கள் இருக்கின்றன.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின்
## தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# சித்திரவதைக்குள்ளான விடுதலைப்புலி உறுப்பினருக்கு சிறிலங்கா அரசு நட்ட ஈடு வழங்கவேண்டும்!

## - ஐ.நா. நீதிமன்றில் 17 நீதிபதிகளின் ஏகோபித்த தீர்ப்பு -

தமிழ் மக்களுக்கு எதிராக மாபெரும் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட 14 ஆண்டுகளை அண்மித்துள்ள நிலையில் தொடர்ந்தும் பன்னாட்டு நீதி விசாரணையை தமிழர் தரப்பு கோரி நிற்கும் நிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அதி முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

17 நீதிபதிகள் கொண்ட குழுவின் குறித்த இறுத்ததீர்ப்பில் சிறிலங்கா அரசு கடுமையாக கண்டிக்கப்பட்டுள்ளதுடன் அரசுக்கு பெரும் இடியாகவும் அமைந்துள்ளது. அதே வேளை சர்வதேச நீதியை வேண்டி நிற்கும் பாதிக்கப்பட்ட தமிழ் தரப்பினருக்கு பெரும் நம்பிக்கை ஒளியாக அமைந்துள்ளது.

### வழக்கும் தீர்ப்பும்

சுவிஸ்லாந்துக்குத் தப்பிச்செல்வதற்கு முன்னதாக இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரொருவர் சுமார் ஒரு மாதகாலமாக சிறிலங்கா காவல்துறையினால் தடுத்துவைக்கப்பட்டு கொடூரமாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரின் சார்பில் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவிடம் முறைப்பாடளிக்கப் பட்டது.

முன்னாள் போராளிகள் இலங்கையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச சிவில் மனித உரிமைப் பட்டயத்தின் நெறிமுறையின் (Optional Protocol) கீழ் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு முன்பாக தொடரப்பட்ட இந்த வழக்கில் முறைப்பாட்டாளரான முன்னாள் போராளி சார்ப்பில் சட்ட நடவடிக்கைக்காக ஜெஃப்ரி றொபேர்ட்ஸனை (King’s Counsel) நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நியமித்திருந்தது.

இந்நிலையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த மேற்படி வழக்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் 17 சர்வதேச நீதிபதிகள் குழாம் ஆராய்ந்து அண்மையில் தீர்ப்பை வெளியிட்டனர். அதில் 17 சர்வதேச நீதிபதிகளாலும் சிறிலங்கா அரசாங்கம் கண்டிக்கப்பட்டுள்ளது. பலமான தாக்குதல்கள், மின் அதிர்ச்சி, பாலியல் வன்புணர்வு ஆகிய உள்ளடங்கிய சித்திரவதைகள் சுவிஸ் வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டது. இச் சித்திரவதையை சிறிலங்கா அரசாங்கம் மறுத்த போதிலும், மனித உரிமை ஆணைக் குழு அம்மறுப்பை நிராகரித்தது. மேலும், குறித்த நபர் சிறிலங்காவிலேயே பயன் தரக்கூடிய உள்நாட்டு தீர்வுகளை நாடி இருக்கலாம் என்ற வாதத்தை மனித உரிமை ஆணைக்குழு நிராகரித்தது.

அத்தோடு சிறிலங்காவை சுயாதீனமாக, காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கு பொறுப்பான பொலிஸாரை விசாரணை செய்யுமாறும், அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட நபருக்கு போதுமான நட்ட ஈட்டை சிறிலங்கா அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும், இவ்வாறான நடத்தை மீண்டும் நடைபெறாமலிருக்க சிறிலங்கா கட்டாயம் தனது சட்டங்களை மாற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளது.

### உள்ளக விசாரணை வேண்டாம்

உள் நாட்டு விசாரணைப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணையே வேண்டும் என தொடர்ந்து வலியுத்தி நிற்கும் பாதிக்கப்பட்ட தமிழ் இனத்திற்கு நம்பிக்கை ஒளியாகவும் ஆதாரபூர்வமாகவும் மேற்படி தீர்ப்பு அமைந்துள்ளமை மறுக்கமுடியாதது. அதாவது இந்த வழக்கில் குறித்த நபர் சிறிலங்காவிலேயே பயன் தரக்கூடிய உள்நாட்டு தீர்வுகளை நாடி இருக்கலாம் என்ற வாதத்தை மனித உரிமை ஆணைக்குழு நிராகரித்ததன் மூலம் பயன்தரக்கூடிய உள்நாட்டு தீர்வுகள் எதுவும் சிறிலங்காவில் இல்லை என்பதை வெளிப்படையாகவே நிரூபித்துள்ளது.

உள்நாட்டு நிர்வாகம் வழியாகவும், பொறிமுறை வழியாகவும் அணுகுமுறை வழியாகவும் ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்குவோம் என்ற சிறீலங்காவின் கபடம் சர்வதேச அரங்கில் இனி எடுபடமாட்டாது என்பதற்காக முதற்படியாக இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. சிறீலங்கா காவல்துறையினரின் மிகக் கொடூரமான இந்த சித்திரவதைகளுக்கே உள்நாட்டு பொறிமுறை நீதியைத் தராது எனில் சிறீலங்கா அரசினதும், இராணுவத்தினதும் பாரிய இனப்படுகொலைகளுக்கான நீதியை ஒருபோதும் உள்நாட்டு பொறிமுறையில் பெற முடியாது என்ற உண்மையும் உறுதியாகின்றது.

சிறிலங்கா காவல்துறையால் பல ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில்இ அது தொடர்பான வழக்குகள் எவையும் சிறீலங்கா காவல்துறையில் முறைப்பாடுகளாக எடுக்கப் படாத நிலையே காணப்படுகின்றது. கொலையாளியே நீதிபதியாக ஒருபோதும் மாற முடியாது என்பதற்கு இணங்க ஈழத் தமிழர்கள் பலர் ஏமாற்ற நிலையில் உள்ள சமயத்தில் குறிப்பிடத்தக்க சர்வதேச நகர்வாக நாடு கடந்த தமிழீழ அரசின் இந்த வழக்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

அத்தோடு ஸ்ரீலங்கா அரசு இராணுவத்தை மட்டுமல்லாது தனது எந்திரமான காவல்துறையையும் சட்ட ரீதியான இனவழிப்புக்காகப் பயன்படுத்தி வருகின்றமை இந்த வழக்கில் வெளிச்சத்திற்கு வந்துள்ளமையும் இங்கு முக்கியமானது. இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளுக்கு சிறீலங்கா காவல்துறைம் பெரும் பங்காற்றி வருகின்றமை இதன் மூலம் சர்வதேசத்திற்கு அம்பலமாகியுள்ளது.

### சிறீலங்கா காவல்துறையின் இனவழிப்பு

காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கு பொறுப்பான காவல் துறையினரையும் விசாரணை செய்யுமாறும், அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும்இ ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் குறித்த வழக்கு தொடர்பாக மாத்திரமின்றி தமிழர் தாயகத்தில் சிறீலங்கா காவல்துறையினர் நிகழ்த்திய இன ரீதியான அனைத்து சித்திரவதைகள் குறித்தும் விசாரணைகளை முன்னெடுக்க பன்னாட்டு சமூகம் வலியுறுத்த வேண்டும். இதேவேளை பாதிக்கப்பட்ட நபருக்கு போதுமான நட்டஈட்டை சிறீலங்கா அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும், இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் நடைபெறாமலிருக்க சிறீலங்கா கட்டாயம் தனது சட்டங்களை மாற்ற வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதுவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைவருக்கும் சர்வதேசம் வழங்கவேண்டிய தீர்வாக அமையவேண்டும் என்பது அனைவரதும் பிரார்த்தனை

குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபருக்கு நட்ட ஈட்டை வழங்குவதனால் மாத்திரம் இலங்கையில் சிறீலங்கா காவல்துறையினரின் இனவழிப்பை முடிவிற்குக் கொண்டு வர முடியாது. சிறீலங்கா அரசு தனது இராணுவம் வழியாகவும்இ தனது காவல்துறையினர் வழியாகவும், தனது அரசமைப்பு வழியாகவும், தனது தொல்லியல் திணைக்களம் வழியாகவும் முன்னெடுக்கும் இனவழிப்பை பன்னாட்டு சமூகம் தடுத்து நிறுத்த வேண்டும்.

# சிறிலங்காவின் ‘அரச’ பயங்கரவாதச் சட்டம்

**- தந்திரீகன்-**

சிறிலங்காவைப் பல சாபக்கேடுகள் பிடித்துள்ளன. அதில் மிகமுக்கியமானது, நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அமுலில் இருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டமாகும்.

இதனால், மிலேச்சத்தனமான முறையில் பாதிக்கப்பட்டவர்கள், தாயக வாழ் தமிழர்கள் தான் என்பது வெளிப்படையானது. சிறிலங்காவின் அத்தனை சிறைகளும், அந்த அவலத்திற்கான சான்றாதாரங்கள்.

அத்தனை சிறைக்கூடங்களும் ஆயிரமாயிரம் அழுகதைகளையும், கூக்குரல்களையும் கண்டிருக்கின்றன. அத்தனையும் விடுதலையைக் கோரிய இனமொன்றை அடக்குவதற்கான மேற்கொண்ட தென்னிலங்கையின் மூன்றாந்தர முனைப்பாகும்.

1977ஜ/லை பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் தான் பயங்கரவாத தடைச்சட்டத்தினை வரைந்து அமுலாக்கியது வரலாறு.

1978ஆம் ஆண்டின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த ஆயுத இயக்கங்களை தடை செய்யும் நோக்கத்துடன் மிகக் கடுமையான ஒடுக்குமுறையை மையப்படுத்தி அச்சட்டம் அன்று வரையப்பட்டது.

1979 ஜ/லை 19ஆம் திகதி தற்காலிக சட்டமாக ஒரே நாளில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் 1982ஆம் ஆண்டில்10ஆம் இலக்க சட்டத்தின்மூலம் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டு நான்கு தசாப்தங்கள் முழுதாய் முடிவடைந்து விட்டன.

இந்த நிலையில் தான் மேற்குலகத்தின் செல்லப்பிள்ளைகளாக 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரி - ரணில் கூட்டாட்சி அரசாங்கம் இந்த சட்டத்தை நீக்குவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அப்போதைய வெளிவிவகார அமைச்சரான மறைந்த மங்கள சமரவீரவை வைத்து வாக்குறுதி வழங்கியது.

இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டமையால் 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 30ஃ1 என்ற தீர்மானத்தினை நிறைவேற்றியதனைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை ரத்து செய்து ஒரு புதிய சட்டவாக்கத்தினை கொண்டுவருவதற்கான கோரிக்கை, மேலும் வலுவடைந்தது.

குறிப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது சிறிலங்கா அரசாங்கம் பற்றிய தீர்மானத்தின் 12 ஆம் பந்தியில்,’பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலீடாக, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை உருவாக்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பினை வரவேற்கின்றது’ என்று குறிப்பிட்டது.

பின்னர், 21 மார்ச் 2019 அன்று நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 40/1 இனூடாக தீர்மானம் 30/1 இன் கீழ் உடன்பட்டுக்கொண்டவற்றை நிறைவேற்றுவதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்து சமகால சர்வதேச சிறப்பு

நடைமுறைகளுடன் இணங்கக்கூடியதான ஒரு சட்டவாக்கத்தினூடாக பதிலீடு செய்கின்ற உடன்பாடும் இதனுள் உள்ளடங்கும் என்று மீண்டும் வலியுறுத்தியது.

அதுமட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் பொது சபையின் ஆறாவது குழுவின் 73ஆவது அமர்வுகள் ஒக்டோபர் 2018இல் இடம்பெற்றபோது, ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறிலங்காவின் நிரந்தர வதிவிட பிரதநிதியான கலாநிதி. ரொஹான் பெரேரா சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான முழுமையான சமவாயமொன்றினை ஏற்றுக்கொள்வதற்கான தேவையினை எடுத்துக்கூறியதுடன் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான முயற்சியில் சிறிலங்காவின் முழுமையான ஒத்துழைப்பினை உறுதி செய்தார்.

தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமானது தனது 22ஆவது சர்வதேசக் கூட்டத்திற்கு பின்னர் சிறிலங்காவுடன் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் சிறிலங்காவானது, 27சர்வதேச சமவாயங்களின் கீழான உடன்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதாக அவதானிக்கப்பட்டிருந்ததோடு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்து விட்டு அதனை சர்வதேச நியமங்களுடன் இணங்கக்கூடிய வகையிலான வேறொரு சட்டவாக்கத்தினூடாகப் பதிலீடு செய்ய வேண்டும்’ என்று குறிப்பிட்டது.

சிறிலங்கா அரசானது, இத்தனை சர்வதேச அரங்குகளிலும் இணக்கப்பாட்டை வெளியிட்டு விட்டு பின்னர் ‘தீவிரவாத எதிர்ப்புச் சட்டம்’ என்ற பெயரில் புதிய வரைவொன்றை தயாரித்தது. அந்த வரைவானது, பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் மேம்பட்டதாக வெளிப்படையில் காண்பிக்கப்பட்டாலும் பலத்த ஆபத்துக்களை உள்ளடக்கத்தில் கொண்டிருந்தது.

சிறிலங்கா அரசானது, இத்தனை சர்வதேச அரங்குகளிலும் இணக்கப்பாட்டை வெளியிட்டு விட்டு பின்னர் ‘தீவிர வாத எதிர்ப்புச் சட்டம்’ என்ற பெயரில் புதிய வரைவொன்றை தயாரித்தது. அந்த வரைவானது, பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் மேம்பட்டதாக வெளிப் படையில் காண்பிக்கப்பட்டாலும் பலத்த ஆபத்துக்களை உள்ளடக்கத்தில் கொண் டிருந்தது.

குறிப்பாக, அவசரகால ஒழுங்கு விதிகளின் முக்கியமான சில விதிகள் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் வெளிப்படையாக புரிந்து கொள்ளமுடியாத வகையில் உள்வாங்கப்பட்டு அதனைச் சட்டமாக்குவதன் மூலமாக எந்தவொரு அவசரகால சூழ்நிலையிலும் அவசரகால ஒழுங்கு விதிகளை நடைமுறைக்கு கொண்டு வராமல் நிரந்தரமாக ஒரு பயங்கரவாத சர்வாதிகார அரசை கொண்டு நடாத்தக்கூடியவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன அம்பலமாக்கப்பட்டது. பலதரப்பினராலும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டது. கூடவே, 2018இல் நடைபெற்ற பின்கதவு அரசியல் புரட்சியும் நிலைமைகளை மாற்றியமைக்கவும் அது கைவிடப்பட்டது.

குறித்த சட்டத்தினை உருவாக்கியவர் அப்போது நீதி அமைச்சராக செயற்பட்டுக்கொண்டிருந்த விஜதாச ராஜபக்ஷ தான். அதுமட்டுமன்றி அப்போது பிரதமர் என்ற அதிகாரத்தில் (19ஆவது திருத்தத்தின் பிரகாரம்) இருந்தவர் தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க தான் என்பது இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டியுள்ளது.

ஏனென்றால், இந்த இணையர்கள்தான் இப்போதும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தினை வர்த்தமானியில் கடந்த மாதம் 22ஆம் திகதி வெளியிட்டிருக்கின்றார்கள். திடீரென, புதியதொரு பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தினை வெளியிட்டிருப்பதால், தமிழினம் பற்றி சிந்திக்க ஆரம்பித்து விட்டார்களோ என்று ஐயங்கொள்ளத்தேவையில்லை.

அவர்களுக்கு ஒருகல்லில் நான்கைந்து மாங்காய்களை வீழ்த்த வேண்டியுள்ளது. அதிலொன்று தான் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைத் தொடர வேண்டியிருக்கின்றது. அதுமட்டுமன்றி, அரசுக்கு எதிரான போராட்டங்களை முடக்குதல், எதிர்க் கட்சிகளை கட்டிப்போடுதல், தொழிற்சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல், ஊடக, சமூக ஊடகங்களை குட்டி உட்கார வைத்தல், என்று நீளும் பட்டியலொன்றே உள்ளது.

இவற்றையெல்லாம் இலக்கு வைத்து தான், சர்வதேச நியமங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு கட்டுப்படுவது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி குறித்த சட்டமூலத்தின் வரைவு வெளியிடப்பட்டது. அது 25ஆம் திகதி பாராளுமன்றத்திற்கும் சமர்பிக்கப்படவுள்ளது.

ஆனால், அதன் உள்ளடக்கம், தற்போது அமுலில் இருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் மிகமிக மோசமான நிலைமையில் தான் உள்ளது.

ஆம், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தினை அவதானிக்கின்றபோது, அது படைகளுக்கு மேலதிக பலத்தை வழங்குகின்றது. சிறிலங்காவின் அரச படைகள் எவையும் நபர் ஒருவரைக் கைது செய்வதற்கான உரிமையை வழங்குகின்றது, ஒரு வாகனத்தை தடுத்து நிறுத்துவதற்கு உரிமை வழங்குகின்றது. அதுமட்டுமன்றி அவ்வாறு தடுத்து நிறுத்தப்படுபவர், அல்லது கைது செய்யப்படுபவர் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைக்க முடியும்.

அதுமட்டுன்றி அந்த விளக்கமறியல் காலத்தில் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் கீழ் வழக்கினை தொடுக்க முடியும்.

அதேநேரம், புதிய சட்ட மூலமானது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக, மக்கள் நுழைவதற்கு முயற்சிக்கும் எந்தவொரு பகுதியையும் தடை விதிப்பதற்கும் அவ்வாறு தடை விதிக்கும் பகுதிகளில் பிரவேசிப்பவர்களை கைது செய்வதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது. அந்தச் செயற்பாட்டை வர்த்தமானியில் அறிவித்தல் ஊடாக வெளியிட்டு நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக பேணவும் வழிசமைக்கிறது.

அதேநேரம், ஒரு நிறுவனம் அல்லது ஒரு குழுவினை, தடை செய்யப்பட்ட அமைப்பாக தீர்மானிக்க முடியும் அதனை வர்த்தமானியில் வெளியிடவும் முடியும். அதற்கு பொலிஸ் மா அதிபர் பரிந்துரை செய்யதால் போர்மானது என்றே குறிப்பிடப்படுகின்றது. இங்கு நீதித்துறையின் வகிபாகம் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.


அத்தோடு, சிறிலங்கா குற்றவியல் நடைமுறைக் கோவையை முற்றிலுமாகப் புறக்கணித்து, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு இணையான குற்றவியல் நடைமுறை முறைமையை நிறுவுவதற்கும், அதனையே பின்பற்றுவதற்கும் வழிசமைத்துள்ளது. இதனால் இரண்டு குற்றவியல் நடைமுறை உருவாகுவதற்கான ஏதுநிலைமைகள் காணப்படுகின்றன.

இவற்றுக்கு எல்லாம் அப்பால், பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கான, ஆயத்தஞ்செய்வதற்கான அல்லது ஏவிவிடுவதற்கான கூற்றினால் பொதுமக்கள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கப்படுகின்ற வகையில், அச்சு ஊடகம், இணையத்தளம், இலத்திரனியல் ஊடகம், வேறு வடிவத்திலான பொது அறிவித்தல் மூலமான வெளியீடுகளும் தண்டனைக்குரியதாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது நேரடியாகவே கருத்து வெளியிடும் சுதந்திரத்தினை முழுமையாக முடக்கும் வகையிலானது என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆக, சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அவ்வாறே நிறைவேற்றப்படுமாக இருந்தால் அது ‘நோயை விட மோசமான சிகிச்சையாகவே இருக்கும்’ சிறிலங்காவில் ‘அரச பயங்கரவாதம்’ தலைவிரித்தாடும்.

# ஈழத் தமிழரை பூண்டோடு அழிக்க புதிய பயங்கரவாத தடைச்சட்டம்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவிப்பு



**தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க ஒரே கல்லில் இரண்டு மாங்காயை விழுத்த இந்த சட்டத்தை உருவாக்குகின்றார். அதாவது ஈழத் தமிழர்களையும் ஒடுக்கிக் கொண்டு, அதே நேரம் தனது இருப்புக்கு எதிரான சிங்கள தரப்பையும் ஒடுக்குவது அவரது நோக்கம்.**

**இனதால் புதிய பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தமிழர்களுக்கு மாத்திரம் எதிரானதல்ல என்ற தோற்றத்தை ஏற்படுத்தி, குழப்பமான அரசியல் நிலையில், ஈழத் தமிழ் மக்களை பூண்டோடு அழித்து முடித்துவிட்டு, அந்த ஆதரவில் தொடர்ந்தும் சிங்கள அரசின் தலைமையை கைப்பற்றி ஆள்வது அவரது நோக்கமாகும். இதனால் பழைய பயங்கரவாத தடைச்சடடத்தை விட பன்மடங்கு புதிய பயங்கரவா எதிர்ப்பு சட்டம் ஆபத்தானது என்று சட்ட வல்லுனர்கள் எச்சரித்து வருகின்றனர்.**

ஈழத் தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கும் வகையில் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை ஸ்ரீலங்கா அரசு உருவாக்கி வருகின்றது. அதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. புதிய மொந்தையில் பழைய கள்ளு என்ற நிலையை தாண்டி புதிய தொந்தையில் மோசமான பழைய கள்ளை இன்னமும் கேடான வகையில் வழங்க ஸ்ரீலங்கா அரசு தயாராகி வருகின்றது. இதனை தடுக்க பன்னாட்டு சமூகம் முன்வரவேண்டும் என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையும் விரைந்து அழைப்பு விடுக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான வகையில் 1979இல் பயங்கரவாத தடைச் சட்டத்தை உருவாக்கியது. ஈழத் தமிழ் மக்களை திட்டமிட்ட வகையில் இனவழிப்பு செய்யும் நடவடிக்கையை தொடங்கிய ஸ்ரீலங்கா அரசு, அதற்கு எதிராக ஈழத் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவதை தடுக்கவே பயங்கவார தடைச்சட்டத்தை அன்று உருவாக்கியது. ஸ்ரீலங்கா அரசினதும் சிங்கள தேசத்தினதும் தமிழின விரோத செயல்கள் கண்டு கொந்தளித்த ஈழத் தமிழ் தாயகம், ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான போராட்டங்களை பல வழிகளிலும் முன்னெடுத்தது.

முக்கியமாக இச்சட்டம் அப்பாவி தமிழ் மக்களை காரணம் ஏதுமின்றி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் சிறையில் அடைத்து சிங்கள இராணுவத்தின் கொடுமையான சித்திரவதைகளை எதிர்கொள்ளும் வாய்ப்பை வழங்கியது. இதனால் 1979களில் இருந்து ஈழத் தமிழ் இளைஞர்களையும் அப்பாவி மக்களையும் ஸ்ரீலங்கா அரசு சிறையில் அடைத்து இனவழிப்பு செய்யத் தொடங்கியது. இதனால் ஈழத் தமிழினமே சிங்களத்தின் இனவழிப்புச் சிறையில் சிக்கியது.

தமிழ் மக்களின் ஜனநாயகக் குரலை ஒடுக்கி, அவர்களின் நடமாடும் சுதந்திரத்தை ஒடுக்கி, அவர்களின் பண்பாட்டு உரிமைகளை மறுத்து சிங்கள இராணுவமும் சிங்களக் காவல்துறையும் மிகக் கடுமையான வகையில் ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் வழியை பயங்கரவாத தடுப்புச் சட்டம் உருவாக்கியது. உலகில் உள்ள மோசமான சட்டமாக பன்னாட்டு சமூகத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம், தமிழர்களை ஒடுக்கி அழிப்பதற்காக சிங்கள மக்களையும் தாக்கியது.

இந்த நிலையில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைக் குற்றங்களால் சர்வதேச மட்டத்தில் விமர்சனங்களுக்கு உள்ளான ஸ்ரீலங்கா அரசு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதி அளித்தது. அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டம் மிக மோசமானது என்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குகின்றது என்றும் ஸ்ரீலங்காவின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா மன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

தற்போது ஸ்ரீலங்கா பாரிய பொருளதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டுமாக இருந்தால் இலங்கை வழங்கிய வாக்குறுதிகளின்படி பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இதனையே இந்தியாவும் தனது நிலைப்பாடாக அறிவித்து வந்துள்ளது.

இந்த நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக கூறிய ஸ்ரீலங்கா, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பழைய பயங்கரவா தடைச்சட்டமானது ஈழத் தமிழ் மக்கள் கடுமையான அஞ்சிய சட்டமாக இருக்கும் நிலையில், புதிய சட்டமானது, சிங்கள மக்களே அஞ்சுகின்ற சட்டமாக காணப்படுகின்றது. முற்று முழுதாக பேச்சு சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் ஸ்ரீலங்காவின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒடுக்கும் என அஞ்சப்படுகிறது.




கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கான உத்தேச வரைபினை வெளியிட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசு அதிகாரபூர்வமான தனது வெளியீடான வர்த்தமானி மூலம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபின் வெளியீட்டை மேற்கொண்டுள்ளது. இதற்கு எதிராக ஸ்ரீலங்காவின் ஆளும் கட்சிகளும், எதிர்கட்சிகளும் கடுமையாக குரல் எழுப்பி வருகின்றன.

என்றாலும் பழைய பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கூடாது என்றும் இதே தரப்பு குரல் எழுப்பி எதிர்ப்புக்களை வெளியிடுவதையும் நாம் அவதானிக்க வேண்டும். தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க ஒரே கல்லில் இரண்டு மாங்காயை விழுத்த இந்த சட்டத்தை உருவாக்குகின்றார். அதாவது ஈழத் தமிழர்களையும் ஒடுக்கிக் கொண்டு, அதே நேரம் தனது இருப்புக்கு எதிரான சிங்கள தரப்பையும் ஒடுக்குவது அவரது நோக்கம்.

இனதால் புதிய பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தமிழர்களுக்கு மாத்திரம் எதிரானதல்ல என்ற தோற்றத்தை ஏற்படுத்தி, குழப்பமான அரசியல் நிலையில், ஈழத் தமிழ் மக்களை பூண்டோடு அழித்து முடித்துவிட்டு, அந்த ஆரவில் தொடர்ந்தும் சிங்கள அரசின் தலைமையை கைப்பற்றி ஆள்வது அவரது நோக்கமாகும். இதனால் பழைய பயங்கரவாத தடைச்சடடத்தை விட பன்மடங்கு புதிய பயங்கரவா எதிர்ப்பு சட்டம் ஆபத்தானது என்று சட்ட வல்லுனர்கள் எச்சரித்து வருகின்றனர்.

அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் விளம்பரங்கள்மீது இரும்புக்கரம் கொண்ட ஒடுக்குமுறை, கடூழியச் சிறை என்பவற்றுடன் பயங்கரவாத குற்றம் சுமத்தப்பட்டவர்கள்மீது 20 ஆண்டுகள் கடூழியச் சிறை என்பவற்றுடன் போக்குவரத்து அத்தியாவசிய சேவைமீது தடைகள் ஏற்பட்டால் பயங்கரவாத குற்றமாக கருதுதல் என முழுக்க முழுக்க ஜனநாயகம் மற்றும் மனித உரிமைக்கான போராட்டங்களை ஒடுக்குதல் என்பன புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் உள்ளடங்குகின்றன.

மேற்குறித்த விடயங்கள், ஈழத் தமிழ் மக்களை அதிகம் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன. ஸ்ரீலங்கா அரசு சர்வதேசத்தை வாக்குறுதி அளித்தபடி பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். அதனை முழுமையாக நீக்குவதுடன் புதிதாக எந்தவிதமான பயங்கர சட்டங்களையும் உருவாக்காமல் தடுப்பதை பன்னாட்டு சமூகம் உறுதி செய்ய வேண்டும். எனினும் பன்னாட்டு சமூகம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தால் இருப்பது பாதிக்கப்பட்ட மக்களை அச்சத்தில் தள்ளுகின்றது.

இதேவேளை ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தின் காட்டும் இரட்டை முகத்தை பன்னாட்டு சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். தனது நலன்களை பெற பழைய சட்டத்தை நீக்குவதைப் போல காண்பித்தபடி, தமிழினத்தை அழிக்க கோரமான வலுவான புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை உருவாக்குவதும் அதற்கு பன்னாட்டு சமூகம் ஆதரவு அளிப்பதும் தமிழினம் மீதான அழிப்புக்கு துணைபோதலாகும். எனவே இதனை தடுக்க பன்னாட்டு சமூகம் முன்வரவேண்டும் என்று நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் அழைப்பு விடுக்கின்றது.

# சிறிலங்கா அரசின் புதிய உத்தி

## 'உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு

- தேசிகன்-

சிறிலங்கா அரசாங்கம் தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்திருக்கின்றது.

இதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் இந்தச் செயற்பாடுகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன், அமைக்கப்படும் ஆணைக்குழுவானது அறிக்கையை தயாரிக்கும் பணியை முன்னெடுக்கப் போவதில்லை என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்கும் முகமாக நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாகவும் அறிவித்திருக்கின்றார்.

அதாவது, பாதிக்கப்பட்ட மக்கள் காணாமலாக் கப்பட்டவர்கள் பற்றிய சான்றிதழையோ அல்லது மரணச்சான்றிதழையோ பெற்றுக்கொள்வார்களாயின் அவர்களுக்கான இழப்பீட்டுத்தொகை உள்ளிட்ட இதர நன்மைகள் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்கு பதிலாக நீதி விசாரணையே முன்னெடுக்கப்பட வேண்டும் என்றால், அவர்களிடமிருக்கும் ஆதாரங்களுக்கு அமைவாக நீதிமன்றப் பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை மையப்படுத்தியே, முன்னதாக சிறிலங்காவுக்கான, தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஷால்க், தென்னாபிரிக்காவிற்கு சென்று அங்கு ஸ்தாபிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் அனுபவத்தைப் பெறுமாறு விசேட இராஜதந்திர அழைப்பொன்றை விடுத்திருந்ததை அடுத்து, வெளிவிவகர அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் அங்கு சென்று திரும்பியிருக்கின்றனர்.

அதன்பின்னர். நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் அங்கமொன்றாக சிறிலங்கா அரசாங்கம் 'உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை' நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அந்தப்பணியை, முறையாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கான அனுபவத்தைப் பெறுவதே இந்த பயணத்தின் நோக்கம் என்றும் நீதி அமைச்சு அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும், தென்னாபிரிக்காவுக்குச் சென்ற குறித்த குழுவானது, அந்நாட்டின் ஜனாதிபதி சிறில் ரமபோஷ, சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் நலேடி பாண்டோர், நெல்சன் மண்டேலாவின் மிகவும் நம்பகமான ஜனாதிபதி எம்பெக்கி உள்ளிட்டவர்களுடன் சந்திப்புக்களை நடத்தியுள்ளது.

அதனைவிட முக்கியமாக, முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையகத்தின் வரையறைகள் தொடர்பாக ஆணைக்குழுவின் அனுபவம் மிக்க ரோல்ப் மேயர் மற்றும் ஐவர் ஜென்கின்ஸ் ஆகியோருடனும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளது.

உண்மையில், சிறிலங்கா அரசாங்கம் பொருளாதார நெருக்கடிகளுக்குள் இருந்து மீள்வதற்காக தத்தளித்துக் கொண்டிருக்கையில் திடீரென உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பக்கம் எதற்காக கவனம் செலுத்துகின்றது என்ற பலமான சந்தேகம் அனைவருக்கும் உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகள், மற்றும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கடந்த கால விதைந்துரைப்புக்கள் ஆகியவற்றை கையாளும் வகையில் தான் இந்த ஆணைக்குழு விவகாரத்தினை அரசாங்கம் கையிலெடுத்திருக்கலாம் என்பது பொதுப்படையான கணிப்பு.

எதுஎவ்வாறாக இருந்தாலும், சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது, நம்பகத்தன்மையை கொண்டிருக்கப்போவதில்லை என்பது இங்குள்ள முக்கிய விடயமாகின்றது.

ஏனென்றால், குறித்த ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படவுள்ள உறுப்பினர்கள் உள்நாட்டிலிருந்தே தெரிவு செய்யப் படுபவர்களாக இருக்கப்போகின்றார்கள். தென்னிலங்கையில் முற்போக்குவாதிகளாக சித்தரிக்கப்பட்டுள்ளவர்களும், தமிழர் தரப்பில் கொழும்பு வாழ்க்கையை கொண்டிருப்பவர்களான 'எலைட்டுக்கள்' தான் அங்கத்தவர்களாக இருக்கப்போகின்றார்கள் என்பது நிதர்சனமானது. இதில் பன்மைத்துவத்தினைக் காண்பிப்பதற்காக, முஸ்லிம் ஒருவரை வேண்டுமானால் நியமிக்கலாம்.

இரண்டாவதாக, இந்த ஆணைக்குழுவினை நியமிப்பது

பாதிக்கப்பட்ட மக்கள் காணாமலாக் கப்பட்டவர்கள் பற்றிய சான்றிதழையோ அல்லதுமரணச்சான்றிதழையோபெற்றுக் கொள்வார்களாயின் அவர்களுக்கான இழப்பீட்டுத்தொகை உள்ளிட்ட இதர நன்மைகள் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்கு பதிலாக நீதி விசாரணையே முன்னெடுக்கப்பட வேண்டும் என்றால், அவர்களிடமிருக்கும் ஆதாரங்களுக்கு அமைவாக நீதிமன்றப் பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தான். அதற்கான நிதியைச் செலவிடுவதும் சிறிலங்கா அரசாங்கத்தின் கீழ் செயற்படுகின்ற நீதி அமைச்சோ அல்லது நல்லிணக்க அமைச்சோ, அல்லது ஜனாதிபதி செயலகமோ தான். ஆகவே, ஆணைக்குழுவின் எந்தவொரு செயற்பாடுகளும் அரசாங்கத்தினை 'புண்' படுத்தும் வகையில் அமையப்போவதில்லை என்பது உறுதியானது.

மூன்றாவது, இறுதிப்போரில் நடைபெற்ற மனித அவலமாக இருக்கலாம், அல்லது தமிழர் தாயகத்தில் விடுதலைப் பயணத்தின் நான்கு தசாப்தகாலத்தில் நடைபெற்ற மனிதாபிமானச் சட்டத்திற்கு முரணான விடயங்களாக இருக்கலாம் அவை தொடர்பில் பிரதான குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருப்பவர்கள், ஆட்சியாளர்களும் படைத்தரப்பினரும் தான். அவ்வாறான நிலையில், அரசாங்கம் தனது சகபாடிகளுக்கு எதிராகவோ அல்லது, தனது ஏவல் இயந்திரமாகக் கருதப்படும் அரச படைகளுக்கு எதிராகவோ நடவடிக்கைகளை எடுக்குமா என்பது பெருங்கேள்வியாகும்.

நான்காவதாக, பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கனவே நிராகரித்த, காணமாலாக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ், மற்றும் மரணச் சான்றிதழ் ஆகிய வற்றையும், இழப்பீட்டையும் பெற்றுக்கொள்ளுமாறே நல்லிணக்க ஆணைக்குழுவும் வலியுறுத்தப்போகின்றது. தனது சொந்தத்துக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக போராடிக்கொண்டிருக்கும் எந்த உறவும் இதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவ்வாறிருக்கையில் ஆணைக்குழுவின் செயற்பாடு யாருக்கானது என்ற கேள்வி எழுகின்றது.

ஐந்தாவதாக, ஆணைக்குழுவில் முன்னிலையாக, தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவதற்கான ஆதாரங்களை முன்வைத்தால் நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. சிறிலங்கா நீதிக்கட்டமைப்பின் ஊடாக, நீதியைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்திருந்தால் போர் நிறைவுக்கு வந்து இற்றைக்கு 13ஆண்டுகளாகின்ற நிலையில் தனது உறவுகளை தொலைத்துவிட்டு வீதிகளில் ஏங்கி நிற்கும் எந்தவொரு உறவும் போராட்டத்திற்காக அங்கலாய்த்துக்கொண்டு திரிந்திருக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. நேரடியாக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவற்றை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றிருக்க முடியும்.

ஆனால் அவ்வாறு நீதிமன்றக் கட்டமைப்பை நாடிச் செல்ல முடியாத நிலைமையே காணப்படுகின்றன. இதற்கு மிகச் சிறந்த உதாணரங்களாக இருப்பது நீதித்துறையினால் தண்டனை அளிக்கப்பட்ட மிருசுவில் படுகொலை குற்றவாளி உள்ளிட்டவர்கள் நிறைவேற்று அதிகாரித்தின் உதவியுடன் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலைமையும் நீடிக்கின்றது. அனந்தி சசிதரனால் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஆட்கொணர்வு வழக்கு இன்னமும் நீடிக்கின்றது. இந்த நிலைமைகள் சிறிலங்கா நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை தொடர்பான பரிதாப நிலைமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆறாவதாக, இதுகால வரையிலும், பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு சர்வதேச விசாரணை ஒன்றையே கோரி நிற்கின்றன. ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ உள்ளகப் பொறிமுறையைத் தான் வலிந்து இறுகப்பற்றி தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களே தங்களைத் தாங்களே விசாரணைக்கு உட்படுத்தும் நிலைமையே அதுவாகும். இதனை எவ்வாறு நீதியை நிலைநாட்டும் செயற்பாடு எனலாம்.

ஏழாவதாக, குறித்த ஆணைக்குழு பரிகாரத்தினை வழங்கும் நோக்கிலானது என்று கூறப்படுகின்றது. அவ்வாறு பரிகாரம் வழங்குவதாயின், முதலில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி விசாரணைகள் அவசியம். அந்த விசாரணைகளின் அடிப்படையில் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டும். இந்தப் பொறிமுறையை முன்னெடுப்பதாக இருந்தால் விசேட குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும். ஆனால் அதற்கான எந்த முனைப்பும் இந்த ஆணைக்குழுவில் இல்லை.

எட்டாவதாக, குறித்த ஆணைக்குழுவானது, அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானதாக கூறப்படுகின்றது. அரச ஊழியம் பெற்று போர் புரிந்த அரச படைகளின் உறவினர்கள் கூட தமது சொந்தக்களைக் காணவில்லை என்று ஆணைக்குழுவில் முன்னிலையாகி முறைப்பாடு செய்ய முடியும். அதற்கு விடுதலைப்புலிகள் அமைப்பை காரண கர்த்தாக்களாக்க முடியும். அதேபோன்று முஸ்லிம் அமைப்புக்களும் சில முறைப்பாடுகளை வைக்கலாம். பதிலுக்கு தமிழ் தரப்புக்களும் முஸ்லிம் அமைப்புக்கள் மீது முறைப்பாடுகளைச் செய்யலாம். ஜே.வி.பி கால நிகழ்வுகளும் ஆணைக்குழுவின் முன்னிலையில் வரலாம். இவையெல்லாம் குழப்பான நிலைமைகளே தோற்றுவித்து இனங்களுக்கு இடையிலான துருவப்படுத்தலை மேலும் வலுப்படுத்தலாம்.

ஒன்பதாவதாக, உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு முனையும் அரசாங்கம் முதலில் பகிரங்கமாக போரின் போது தவறுகள் நடந்தன. அதற்கு அரச படைகள் காரணமாக இருக்கின்றன. கடந்த ஆட்சியாளர்கள் காரணமாக உள்ளனர் என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். ஆனால் அதற்கான சாத்தியங்கள் எள்ளளவும் இல்லை. ஏனென்றால் தற்போதைய ஆட்சியே போர்க்குற்றவாளிகளின் கைளில் தான் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

பத்தாவதாக, மங்கள முனசிங்கவின் ஆணைக்குழு, கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைகுழு, பரணகம ஆணைகுழு என்று நீளும் ஆணைக்குழுவின் பட்டியல்கள் ஒருபுறமிருக்க இவற்றின் அறிக்கைகளும், பரிந்துரைகளும் எங்கு சென்றிருக்கின்றன என்பது பற்றி தெரியாத நிலையில் மீண்டும் ஒரு ஆணைக்குழு எவ்விதமாக பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும்.

ஆக, சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, உண்மையை கண்டறியப் போவதுமில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதுமில்லை. மாறாக காலத்தினை கடத்தப்போகின்றது. குரோதங்களை வளர்க்கப்போகின்றது. சர்வதேசத்தினை ஏமாற்றப்போகின்றது.



# முகவரி எங்கே?

-ச.பார்த்தீபன்-

இந்த கட்டுரை பிபிசி செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது

இலங்கை முழுவதிலும் வாழும் பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட நிரந்தர முகவரிகளை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி தோட்டத் தொழிலாளர் குடும்பத்தை சேர்ந்த ஒருவர் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். மாவத்தகம மூவான்கந்தவைச் சேர்ந்த ஜீவரத்தினம் சுரேஷ்குமார் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட 18 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். “தோட்டத் தொழிலாளர்களுக்கான பதிவு செய்யப்பட்ட நிரந்தர குடியிருப்பு முகவரிகள் தனிநபர்கள் அரசாங்க சேவைகளை அணுகுவதையும், நாட்டின் ஜனநாயக செயற்பாட்டில் பங்கேற்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது” என குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் முதன்மை பொருளாதார ஆதாரங்களாக திகழும் பெருந்தோட்டத் துறையில் பணிபுரியும் மூவாங்கந்த தோட்டத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், இந்த குடும்பங்கள் எவருக்கும் நிரந்தர அஞ்சல் முகவரி இல்லை எனவும், எனவே குறித்த தோட்டத்தில் வசிக்கும் குடிமக்கள் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் மற்றும் பொதிகளை தமது வீடுகளுக்கோ அல்லது அவர்களது வசிப்பிடங்களுக்கு பெற்றுக்கொள்வதில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து தபால்களும் பொது முகவரி மூலம் கூட்டாக பெறப்படுவதாகவும், தோட்டத்தில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் ஒரே பொதுவான முகவரியே காணப்படுவதாகவும், இந்த தோட்டத்தில் வசிப்பவர்களின் வீடுகளுக்கு நிரந்தர வதிவிட முகவரி இல்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மூவன்கந்த துணை தபால் நிலையத்திற்கு மொத்தமாக

> பெருந்தோட்டங்களை வாழ்வாதாரமாக கொண்டு வாழும் மக்கள் இந்த நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு 200 வருடங்கள் ஆகின்ற நிலையில் அவர்களுக்கான முகவரியைக் கூட வழங்குவதற்கு இந்த நாட்டின் ஆட்சியாளர்களால் முடியாமல் போயுள்ளது. ஏமாற்று அரசியலை தொடர்ந்துகொண்டிருக்கும் அந்த மக்களின் பிரதிநிதிகளும் இதுத் தொடர்பில் வாய்த்திறப்பதில்லை.

வரும் கடிதங்கள், மொத்தமாக மூவன்கந்த தோட்டத்தின் கண்காணிப்பாளருக்கு வழங்கப்படுவதாகவும், அவர் இந்த கடிதங்களை தனக்குத் தெரிந்த முகவர் மூலம் தோட்டத்தில் வசிக்கும் நபர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இது மாவத்தகம-முவன்கந்த தோட்டத்தொழிலாளர்கள் மாத்திரம் எதிர்நோக்கும் பிரச்சினை அல்ல, இலங்கை முழுவதிலும் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் எதிர்நோக்கும் பிரச்சினையே இது. இந்நாட்டின் அந்நியச் செலாவணிக்காக நூற்றாண்டைக் கடந்து உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு முகவரி இல்லை என்பது மிக வேதனையான விடயம் அல்லவா? பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளில் தனித்தனி முகவரிகள் வழங்கப்படாமை மிக முக்கியமான விடயம். சொந்த காணியையோ அல்லது வீட்டையோ கொண்டிராத மக்களுக்கு முகவரியை வழங்குவதில் சட்டச்சிக்கல் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனினும் அந்த மக்களுக்கு வீட்டு அல்லது காணி உரிமையை வழங்காதிருப்பதும், முகவரியை வழங்க ஒரு பொறிமுறையை உருவாக்காமல் இருப்பதும் யாருடைய தவறு?

பெருந்தோட்ட மக்களுக்கு கடிதங்கள் தோட்ட நிர்வாகத்தின் ஊடாகவே விநியோகிக்கப்பட்டு வந்தன. ஒரே முகவரி, ஒரே பெயரில் அல்லது முதல் எழுத்துக்களும் பலர் வாழ்கின்றமை போன்ற பல்வேறு காரணங்களால் கடிதங்கள் தாமதமாக உரியவரிடம் சேர்வது, கடிதங்கள் காணாமல் போகின்றமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் பல தசாப்தங்களாக நீடிக்கின்றன. இந்த நிலையில் தபால் சேவைகள் தோட்ட நிர்வாகத்திற்கு ஊடாகவன்றி நேரடியாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் கடந்த 2006ஆம் ஆண்டு தபால் சேவைகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லசாமி, தோட்டப்புறங்களுக்கு தபால் விநியோகத்திற்கென 344 பேரை நியமித்திருந்தார். 500 பேருக்கு நியமனத்தை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியபோதிலும், திறைசேரி 400 பேரின் நியமனத்திற்கே நிதி ஒதுக்கீடு செய்தது. எனினும் 344 பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டது. அந்த நியமனத்தின் ஊடாக பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் இன்றும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் எனினும் ஒரே முகவரி, ஒரே பெயரில் அல்லது முதல் எழுத்துக்களுடன் பலர் வாழ்கின்றமை போன்ற அதே பழைய பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த 2002ஆம் ஆண்டு 125ற்கு மேற்பட்ட தோட்டங்களில் முகவர் தபால் நிலையங்கள் நிறுவப்பட்டு இதற்கு பொறுப்பாக அத்தோட்டத்தை சேர்ந்த ஒருவர் உப தபால் அதிபராக நியமிக்கப்பட்டு அவர்களுக்கு சிறு கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்பட்டது.

இவர் உப தபால் அதிகாரியைப் போல முத்திரைகள் விற்பனை, தபால் சேகரிப்பது, அண்மித்த தபால் நிலையத்தில் இருந்து கடித பொதியை கொண்டு வந்து உரியவர்களுக்கு சேகரிப்பது போன்று கடமைகள் அவருக்கு பொறுப்பாக்கப்பட்டது எனினும் அந்த திட்டம் தோல்வியில் முடிந்தது. 3,000 ரூபாய் என்ற சிறிய கொடுப்பனவுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாது என உப தபால் அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அறிவிக்கவே அத்துடன் அந்த திட்டம் கைவிடப்பட்டது. இன்றளவிலும் அவ்வாறு அமைக்கப்பட்டு, கைவிடப்பட்ட உப தபால் நிலையங்களை மலையகப் பெருந்தோட்டங்களில் காணமுடியும்.

உண்மையில் பெருந்தோட்டங்களை வாழ்வாதாரமாக கொண்டு வாழும் மக்கள் இந்த நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் ஆகின்ற நிலையில் அவர்களுக்கான முகவரியைக் கூட வழங்குவதற்கு இந்த நாட்டின் ஆட்சியாளர்களால் முடியாமல் போயுள்ளது. ஏமாற்று அரசியலை தொடர்ந்துகொண்டிருக்கும் அந்த மக்களின் பிரதிநிதிகளும் இதுத் தொடர்பில் வாய்த்திறப்பதில்லை. மாறி மாறி வரும் அரசாங்கங்களும் அவர்களின் ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு கண்டும் காணாததுபோல் இருக்கின்றதோ, அப்படியே இந்த பிரச்சினையை கடந்து செல்கின்றது.

சரியான முகவரி இல்லாத காரணத்தினால் நேரத்திற்கு தமக்கான மிக முக்கியமான கடிதங்கள் கிடைக்கப்பெறாத நிலையில், தமக்கான வேலை வாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வுகளை இழந்த பலரை இன்றும் நாம் பெருந்தோட்டப் பகுதிகளில் காண முடியும். அடகு வைத்த நகைகள் தொடர்பில், வங்கிகள் அனுப்பிய ஏலவிற்பனை குறித்த அறிவிப்புகள் தாமதமாக கிடைத்த பலர் தமது பெறுமதிமிக்க நகைகளை இழந்த சம்பவங்கள் ஏராளம். இன்று தொலைத்தொடர்பு வசதிகள் பெருகி மலிவாக கிடைத்தாலும் சில முக்கியமான விடயங்களுக்கு கடிதத் தொடர்புகளே பின்பற்றப்படுகின்றன. அவ்வாறான ஒரு சூழலிலேயே இந்த முகவரி இல்லா பிரச்சினையின் தீவிரம் உணரப்படுகிறது.

இவ்வாறான ஒரு நிலைமையிலேயே குறித்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு முகவரியற்ற மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை பெற்றுத்தருமா?



# சத்தமில்லாது விழுங்கப்படும் தமிழரின் எல்லைக்கிராமங்கள்

**-சுதர்சினி-**

தமிழர் தாயகத்தின் எல்லைக் கிராமங்கள் அண்மைக்காலமாக திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலால் அதிவேகமாக அபகரிக்கப்பட்டு வருகின்றது. வீட்டில் உள்ள உடைமைகளை திருடவரும் கள்வன்போல்நடுநிசியில்எல்லைப்புறகாணிகளில் கற்களை கொண்டுவந்து நாட்டியும் தமிழர்கள் வழிபடும் தெய்வங்கள் உள்ள கோவில்களை இரவோடு இரவாக அகற்றியும் திட்டமிட்ட பாரிய நில அபகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் குறிப்பாக முல்லைத்தீவை முழுவதுமாக பௌத்த மயமாக்க முதலில் அதன் எல்லைக் காணிகள் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவருகின்றது. கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி போன்ற சுமார் ஆறு கிராம சேவகர் பிரிவிகளில் வயற்காணிகள், நீர்ப்பாசனக் காணிகள், மானாவரி காணிகள் பரந்து காணப்படுகின்றன. இந்தக் காணிகளிலில் அதன் சொந்த உரித்துடைய தமிழ் மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் இந்த வயற்காணி பகுதிகளில் தான் தற்போது இரவோடு இரவாக யாருக்கும் தெரியாத வகையில் எல்லைக் கற்களைப் போட்டு அவற்றை அபகரிக்கும் வகையில் சிங்கள அரசும் அதன் நிகழ்ச்சி திட்டங்களும் செயற்பட்டு வருகின்றன.

இது ஒருபறமிருக்க எம்மவர்கள் அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் காணிகளை தற்போது விவசாயம் செய்து வரும் காணிகளை தமது காணிகள் எனக்கூறி வனஇலாகா துறையினர் எல்லைக் கற்களை போடுவதும் வன ஜீவராசிகள் திணைக்களம் தமது காணிகள் என அறிவிப்பதும், தொல்லியல் திணைக்களம் தமது பகுதி என அறிவிப்பதும் தொடர்கின்றது.

இதனைவிட ஆவயன்குளம், முந்திரிகைக்குளம், மறிச்சுக்கட்டி குளம் போன்ற குளங்களுடன் இணைந்த வயற்காணிகளை ஏற்கனவே அபகரித்துவிட்டார்கள். விவசாயத்திற்கும் நன்கு பயன்தரும் குளங்களுடன் இணைந்த குறித்த வயற்காணிகளை அபகரித்து அவற்றை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கிறார்கள். எமது மக்கள் போருக்கு பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது அந்தக் காணிகள் அனைத்தும் சிங்கள மக்களுடைய கைகளுக்குத் தான் சென்றது.

இவ்வாறு காணிகள் அபகரிக்கப்படுவதால் எம்மவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து அடுத்த சந்ததியினரின் எதிர்காலமே பெரும் கேள்விக்குறியாகி நிற்கிறது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குத் தெரியாமல் வெலியோயாவில் இருக்கும் நில அளவைத்திணைக்களம் முல்லைத் தீவிற்குள் வந்து அளவுகளை மேற்கொள்வதுடன் எல்லைக்கற்களையும் நாட்டுவார்கள் என்றால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் செயற்திறன் தான் யாது என்ற பெரும் சந்தேகமும் கேள்வியும் எழுவது மறுப்பதற்கில்லை.

இதேவேளை தமிழர் தாயகத்தில் திடீர் திடீரென முளைக்கும் பௌத்த விகாரைகளும் பெரும் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வருகின்றது. சிறிலங்காவில் தற்போதிருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் 9ஆம் சரத்தின் பிரகாரம் பௌத்த மதத்திற்கான முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கயிற்றில் தொங்கியபடி தமிழர் தாயகம் எங்கும் தாராளமாக பௌத்த விகாரைகள் முளைக்கத் தொடங்கி விட்டன.

யாழ். மாவட்டத்தில் 6 விகாரைகள், கிளிநொச்சியில் 3 விகாரைகள், மன்னாரில் 20 விகாரைகள், வவுனியாவில் 35 விகாரைகள், முல்லைத்தீவில் 67 விகாரைகள் என்ற வகையில் 131 விகாரைகள் வடக்கில் இருப்பதாக தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கை கூறுகிறது. இதனைவிடவும், படைமுகாம்களின் முன்னாலும், காவல்துறை நிலையங்களின் முன்னாலும் புத்தர் சிலைகள் தாராளமாக உள்ளன. அவை அடுத்துவரும் காலத்தில் பௌத்த விகாரைகளாக மேலெழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.





# நேட்டோவில் பின்லாந்து சோதனையா, சாதனையா?

-பூலோகன்-

'ஒரு வரலாற்றுப்பூர்வமான வாரம். இன்று முதல், பின்லாந்து கூட்டமைப்பின் முழுநேர அங்கத்துவராகிறது. நேட்டோ தலைமையகத்தில் முதல் முறையாக நாங்கள் பின்லாந்து கொடியை ஏற்றியுள்ளோம். பின்லாந்து பாதுகாப்பு, நார்டிக் பாதுகாப்பு மற்றும் நேட்டோ அமைப்பு முழுவதிற்கும் நல்ல நாளாக இருக்கும்.'

இந்தக் கூற்றுக்குச் சொந்தக்காரர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க். இவர் நேட்டோ அமைப்பின் செயலாளர் நாயகமாக உள்ளார். அவர் மேற்படி அறிவிப்பை விடுத்தது கடந்த நான்காம் திகதியாகும்.

ஆம், அன்றையதினம், 30நாடுகளின் அங்கத்துவத்தைக் கொண்டிருந்த நேட்டோவில் பின்லாந்து 31ஆவது நாடாக இணைந்தது. பின்லாந்தைப் பொறுத்தவரையில், இந்த இணைவு, ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இந்த நிகழ்வில், பின்லாந்து ஜனாதிபதி சௌலி நினிஸ்டோ மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சர் அண்டி கைகொனென் மற்றும் வெளியுறவுதுறை அமைச்சர் பெக்கா ஹாவிஸ்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்லாந்து நேட்டோ அமைப்பில் இணைவதற்கு ஆட்சேபனை இல்லை என்று கடைசி நாடாக துருக்கி கையெழுத்திட்டதை அடுத்து அந்த ஆவணங்களை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டணி பிளிங்கனிடத்தில் ஒப்படைத்தது.

இதனையடுத்து உத்தியோக பூர்வமாக பின்லாந்து நேட்டோவில் இணைந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு பின்லாந்துக்கும், நேட்டோ அங்கத்தவர்களுக்கும் மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கின்றது.

நேட்டோவை பொறுத்தமட்டில் புதிய நாடுகள் இணைவதற்கு எப்போதும் கதவுகள் திறந்தே இருக்கின்றன. நேட்டோவின் இணையதள விபரப்படி, வொஷிங்டன் உடன்படிக்கையின் கொள்கைகளை மேம்படுத்துவதோடு, ஐரோப்பிய - அட்லாண்டிக் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த பங்களிப்பு செய்ய தயாராக உள்ள நாடுகள் உறுப்பினராகலாம் என்பதோ குறைந்த பட்சத் தகுதிகளாக உள்ளன.

இந்த நிலையில், 2022ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி நேட்டோ அமைப்பில் இணைவதற்கான விண்ணப்பத்தை பின்லாந்து வழங்கியது. அதனுடன் கூடவே சுவீடனம் விண்ணப்பத்தை வழங்கியிருந்தது. சுமார் 11 மாதங்களுக்குப் பின்னர் பின்லாந்துக்கு மட்டும் அனுமதி கிடைத்திருக்கின்றது.

சுவீடனின் விண்ணப்பம் தற்போதும் நிலுவையில் உள்ளது. துருக்கி மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் சுவீடனுக்கு எதிர்ப்பு தெரிவித்தால் சுவீடனின் விண்ணப்பம் பூர்த்தியாகவில்லை. குறித்த நாடுகள் இரண்டும் பின்லாந்தைக் கூட இறுதியாகவே அங்கீகரித்திருந்தன. துருக்கி மார்ச் 30ஆம் திகதிகயும், ஹங்கேரி மார்ச் 27ஆம் திகதியும் அங்கீகரித்தது.

பின்லாந்து, குர்திஷ் போராளிகளை ஆதரித்ததாகச் கூறியே துருக்கி அதற்கான அனுமதி வழங்குவதை தாமதப் படுத்தியது. பின்னர், மீளாய்வினை அடுத்து பின்லாந்தை அனுமதித்தது. ஆனால் சுவீடனை அனுமதிக்கவில்லை.

துருக்கியைப் பொறுத்தவரையில் குர்திஷ் போராளிகளை தமது எதிரிகளாகவே கருதுகின்றது. அவர்களை பயங்கரவாதிகளாகவும் அறிவித்துள்ளது. இந்நிலையில் குர்திஷ் பயங்கரவாதிகளுக்கு சுவீடன் அடைக்கலம் கொடுப்பதாக துருக்கி குறிப்பிடுகின்றது.

இதனால் சுவீடனை நேட்டோவில் இணைப்பதற்கு துருக்கி மறுக்கிறது. கூடவே ஹங்கேரியும் துருக்கிக்கு துணையாக நிற்கின்றது. இதனால் சுவீடனின் நேட்டோ அங்கத்துவக் கனவு இன்னமும் நனவாகாது நீடிக்கின்றது.

சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், உக்ரேனின் சில பகுதிகள் கிளர்ச்சியாளர்களிடத்திலும், மேலும் சில பகுதிகள் ரஷ்யாவிடத்திலும் உள்ளன. ஆகவே, ரஷ்யா - உக்ரேன் இடையே எல்லை பிரச்சினை என்பது தீராத்தலை வலியாகவே நீடித்தது.

இதனால் ரஷ்யாவை சமாளிக்க நேட்டோவில் இணையும் முடிவினை உக்ரேன் எடுத்தது. அதற்கான ஆர்வத்தையும் வெளிப்படுத்தியது. இந்த ஆர்வத்தை புரிந்து கொண்ட நேட்டோ தரப்பு உக்ரேனுடன் நட்பு பாரட்டியது.

நேட்டோவைப் பொறுத்தவரையில், உக்ரேனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் ரஷ்யாவை அண்மித்து விடலாம் என்பது திட்டம். ஆனால், உக்ரேனைப் பொறுத்தவரையில், ரஷ்யாவை விட உக்ரேன் படைபலம் சிறியது என்பதால் நேட்டோ படைகளின் உதவியுடன் ரஷ்யாவை சமாளிக்கலாம் என்று கருதியது.

இந்த இருதரப்பு நலன்களை மையப்படுத்திய நகர்வினை ரஷ்யா தனக்கு பேராபத்தாக கருதியது. இதனால் உக்ரேன் மீது போர் தொடுத்தது. அந்தப் போர் இப்போது வருடமொன்று கடந்தும் நீடிக்கின்றது. இப்போது அந்தப் போர் ரஷ்யா எதிர் உக்ரேன் மற்றும் நேட்டோ நாடுகள் என்றாகிவிட்டது.

அதுவொருபுமறிருக்கையில், உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்தமை தான், பின்லாந்தும், சுவீடனும் நேட்டோவின் அங்கத்துவத்தினை நாடுவதற்கு வழிசமைத்தது.

அதாவது, உக்ரேன் விவகாரத்தில் ரஷ்யா சதகமான முடிவுகளைக் கண்டால் அடுத்ததாக, பின்லாந்து, சுவீடன் மீது ரஷ்யாவின் பார்வை திரும்பலாம் என்று அந்த நாடுகள் கருதின.

அவ்வாறான தீர்மானமொன்றை ரஷ்யா எடுத்தால் கூட அதனைக் கட்டுப்படுத்தவல்ல சக்தி பின்லாந்து, மற்றும் சுவீடனுக்கு இல்லை என்பதே யதார்த்தமான நிலையாகும். இவ்விரு நாடுகளின் படையினர்கள் கூட ரஷ்யபவுடன் ஒப்பிடுகையில் சொற்ப அளவினராகவே உள்ளனர். ஆகவே ரஷ்யாவின் அகலக்கால் வைப்புக்கு பதிலடி வழங்கும் திராணிஅ அந்நாடுகளுக்கு இல்லை. இதனால் தான் அவை தீர்க்கமான முடீவுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது.

குறித்த இரு நாடுகளும், ரஷ்யாவை அண்மித்துள்ள நாடுகள். குறிப்பாக, பின்லாந்து ரஷ்யாவுடன் 1,340 கிலோமீற்றர் எல்லையைப் பகிர்கிறது. 1948இல், சோவியத் யூனியனுடனான 'நட்பு ஒப்பந்தத்தின்' ஒரு பகுதியாக நடுநிலை நாடாக இருக்கப் பின்லாந்து ஒப்புக்கொண்டது.

ஆனால், சோவியத் யூனியன் சரிந்த நிலையில், பின்லாந்து நேட்டோவுடன் நெருக்கமாகி, 1994இல் இதன் அதிகாரப்பூர்வ பங்காளி என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. ஆனால், நேட்டோவின் உறுப்பினராகாமலேயே இருந்தது.

ஆனால், உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்த போரைக் கண்டு அச்சமடைந்த பின்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடான சுவீடனும் நேட்டோவில் சேர விண்ணப்பித்தது. துரதிஷ்டவசமாக சுவீனுக்கு அங்கத்துவ வாய்ப்புக் கிட்டவில்லை.

நேட்டோவில் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள பின்லாந்து, தன் பின்னால் யானைப் பலம் மிக்க வல்லாதிக்க நாடுகள் தாராளமாக உள்ளது என்ற மனவுறுதியை கொள்ளகிறது.

அதனை அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹாவிஸ்டோ வெளிப்படுத்தியுள்ளார். அவர், 'நேட்டோவில் அங்கத்துவத்தினைப் பெற்றமை எங்களுக்கு பெருமை மிக்க தருணம் ஆகும். ரஷ்யாவின் தொடர் சட்டவிரோத நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டு வரும் உக்ரேனுக்கு அதிக ஆதரவு அளிக்க நேட்டோவை வலியுறுத்துவதே பின்லாந்துக்கு மிக முக்கிய குறிக்கோளாக இருக்கும். ஐரோப்பா மற்றும் அட்லாண்டிக் பகுதி முழுக்க பாதுகாப்பை பலப்படுத்தவே நாங்கள் நினைக்கிறோம்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், நேட்டோ பின்லாந்துக்கு அங்கீகாரமளித்ததன் பின்னணி சற்றே வித்தியாசமனது. 2008ஆம் ஆண்டு உக்ரேன் நேட்டோவில் அங்கத்துவத்தினைக் கொள்ள முடியும் என்ற நிலைமை இருந்தபோதும், அதனை உக்ரேன் பொருட்டாக கொள்ளவில்லை.

பின்னர், ரஷ்யாப போரை ஆரம்பித்ததும், போர் ஆரம்பித்தவுடன் நேட்டோவில் விரைவாக இணைய ஒப்புதல் தர உக்ரைனின் கோரிக்கையை நேட்டோ நிராகரித்தது. உக்ரேன் அங்கத்துவத்துக்கு விண்ணப்பித்தது. ஆனால் நேட்டோ விதி 5 படி ஒரு உறுப்பு நாடு தாக்கப்பட்டால், அனைத்து உறுப்பினர்களும் அதன் பாதுகாப்புக்காக உதவ முன்வர வேண்டும்.

உக்ரேனுக்கு உறுப்புரிமை அளித்தால் நேட்டோ நாடுகள் அனைத்தும் ரஷ்யாவுடன் போருக்குச் செல்ல வேண்டியிருக்கும். அது மூன்றாவது உலகப்போராகவே உருவெடுக்கும். இதனால், அவ்விதமான முடிவொன்றுக்கு நேட்டோ செல்லவில்லை.

ஆனால், உக்ரேனுடன் வருடமொன்று தாண்டி போர் நீடிக்கும் நிலையில், ரஷ்யா உக்ரேனை கடுமையாக கையாள முனைகின்றபோது, அதற்கு உரிய பாடம் புகட்டுவதற்கு ரஷ்ய எல்லை நாடாகவுள்ள பின்லாந்து மிகவும் முக்கியத்துவமானதாக இருக்கின்றது.

ஆக, நேட்டோவில் இணைந்தமை பின்லாந்தைப் பொறுத்தவரையில் இராஜதந்திர ரீதியானதும், தனது தற்பாதுகாப்புச் சார்ந்தும் சாதனையாக பார்க்கப் பட்டாலும், ரஷ்யாவினை இலக்கு வைத்து பின்லாந்தை நேட்டோ மையப்படுத்துமாக இருந்தால் அது சேகமானதாகவே மாறுவதற்கே வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில், 2ஆம் உலக போருக்கு பிறகு சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பாவில் இருந்து படைகளை திரும்ப பெறமறுத்தது. இதை முறியடிக்கும் வகையில் நட்பு நாடுகள் இணைந்து உருவாக்கியது தான் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. இது நேட்டோ என்று அழைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.






நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க பளை, பூநகரி மற்றும் முழங்காவில் பிரதேசங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாவீரர் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் மதியழகன்- அஜித்ரா தம்பதிகளின் பிள்ளைகளான அஸ்விகா மற்றும் அஸ்விந் ஆகியோரின் பிறந்தநாளினை முன்னிட்டு 2 இலட்சம் ரூபா பெறுமதியில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மேற்படி பிரதேசங்களில் உள்ள மாவீரர் குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 53 மாணவர்களுக்கான புத்தகப்பைகள் கொப்பிகள் மற்றும் பேனா பென்சில்கள் போன்ற கற்ற உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.